விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 256 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 16 திங்கட்கிழமை (01.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# ஜனாதிபதி இன்று யாழ்.விஜயம்

## மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான ஆரம்பப் பணிகளை ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.வரும் ஜனாதிபதி செம்மணி செல்வாரா?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செம்மணிமனிதப்புதைகுழியை பார்வையிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.விஜயத்தின்போது 15ஆம் பக்கம் பார்க்க

## 12 எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 12 மனித எலும்புக் 15ஆம் பக்கம் பார்க்க



### யாழ்ப்பாணம் ஊரெழுவில்

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன் தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் தெல்லிப்பழை 15ஆம் பக்கம் பார்க்க

### போதைப்பொருளுடன்

## யாழில் யுவதி உட்பட மூவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் யுவதி உட்பட மூவர் நேற்று முன்தினம் பொலி 15ஆம் பக்கம் பார்க்க

### கோட்டா கைதாகலாம்?

# வாக்குமூலம் வழங்க சி.ஐ.டியினால் அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வாக்குமூலம் வழங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## யாழில் ஹெரோயினுடன் கைதான இளைஞனை விடுவிக்க

### ரூ.20 இலட்சம் லஞ்சம் பெற முயற்சி மதுவரி திணைக்கள அதிகாரிகள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நபரை கைது செய்யாது தவிர்க்க 20 இலட்சம் ரூபாய் இலஞ்சம் வாங்க முற்பட்ட மதுவரி 02ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையில்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் ஜெனிவா மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத் தொடர் 02ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் நாட்களில் நாமல், சஜித் கைதாகலாம்

### அநுர அரசு அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் சஜித் பிரேமதாஸ மற்றும் நாமல் ராஜபக்ஷ போன்றவர்களும் சட்டத்தின் வரையறைக்குள் கைது செய்யப்படலாம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்று 02ஆம் பக்கம் பார்க்க

### அச்சுவேலியில்

## 16 வயது மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் எரிகாயங் 15ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோல், டீசல் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் பெற்றோல், டீசல் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலைத் திருத்தத்தின்படி நள்ளிரவு முதல் எரிபொருள் விலை குறைக் 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

குறித்து அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பிற்குள் விசாரணைகளை முன்னெடுக்க முடியும் என்பதை 2009 மற்றும் 2010 ஆம்ஆண்டுகளில் நாங்கள் வலியுறுத்தி இருந்தோம்.

ஆனால் முன்னாள் பிரதம நீதியரசர் சிறாணி பண்டாரநாயக்கவை ராஜபக்ஷக்கள் வெளியேற்றிய விதத்திற்கு பின்னர் உலகிற்கு எம்மால் எதுவும் கூற முடியாது போனது.ஆனால் எமது ஆட்சியில் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை வெளிப்படுத்தி உள்ளோம்.

2005 ஆம் ஆண்டில் சிவராம் போன்ற ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இவ்வகையான சம்பவங்களை மீள் விசாரணைக்கு எடுக்குமாறு கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி உத்தரவிட்டார்.

போரின் பின்னர் செய்த குற்றங்கள் குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. செம்மணி மனிதப் புதை குழி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க அரசாங்கம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

அங்குள்ள காவலர்களுக்கும் அர சாங்கமே ஊதியம் வழங்குகின்றது. செம்மணி மாத்திரம் அல்ல, கொக்குத்தொடுவாய், மண்டைதீவு, மன்னார், கொழும்பு துறைமுகம் என பல இடங்களில் மனித புதைகுழிகள் இருக்கின்றன.

அவற்றைத் தோண்டும் பணிகளும் ஆரம்பிக்கப்படும். காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் மீள நடவடிக்கைளை ஆரம்பித்துள்ளது. எனவே அரசாங்கம் என்ற ரீதியில் இந்த விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுக்க விரும்புகிறது.

இந்தப் புதைகுழிகளின் உரிமையாளர்கள் ரணில் மற்றும் ராஜபக்ஷக்களே தவிர நாம் அல்ல. சிலர் வடக்கிலும் உள்ளனர். செம்மணி மனிதப் புதைகுழியுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தெரிவாகியுள்ளனர். எனவே சுயாதீனமான நீதிமன்ற கட்டமைப்பு நாட்டில் காணப்படும் போது, சர்வதேச விசாரணைகள் தேவையில்லை. எனவே தற்போதைய சூழலில் சர்வதேச விசாரணைகள் அநாவசியமான குழப்பத்தை ஏற்படுத்துமே தவிர நீதியைப் பெற்றுக்கொடுக்காது.

இருப்பினும் உள்ளக விசாரணைகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கு அனுமதியளிக்க தயாராகவே உள்ளோம். குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தேவைப்படலாம்.

மறுபுறம் சர்வதேச விசாரணைகள் நாட்டிற்குள் வந்ததும் தோல்வியடைந்துள்ள இனவாதிகள் மீள எழுவார்கள்.

குறிப்பாக ராஜபக்ஷர்கள் இதனைக் காரணம் காட்டி இனவாத அரசியலை முன்னெடுப்பார்கள். 6 தடவைகள் பிரதமராக இருந்த ரணிலை நீதவான் நீதிமன்றத்தினால் கைது செய்ய முடியும் என்றால் எமது நாட்டின் நீதித்துறை எவ்வாறு உள்ளது என்பதை அனைவராலும் புரிந்துக்கொள்ள முடியும் என்றார். (ம-7)

## வாக்குமூலம்...

காலி முகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீதான தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியது தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அளித்த வாக்குமூலம் தொடர்பில் கோட்டாபயவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் அழைக்கப்பட்ட திகதி குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இங்கிலாந்து பயணம் மற்றும் வருகைக்காக அரசு நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலம் அளிக்க சமன் ஏக்கநாயக்கவை இன்று முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பெற்றோல்...

கப்பட்டுள்ளது.

அதன்படி, ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. முன்னதாக 289 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் புதிய விலை 283 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 313 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அதன் விலை 325 ரூபாவாக இருந்தது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 6 ரூபாவினால் குறைக்கப்பட்டு, 305 ரூபாவிலிருந்து 299 ரூபாவாக அதன் புதிய விலை குறைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒக்டேன் 95 ரக பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. ஒக்டேன் 95 பெற்றோல் ஒரு லீற்றர் 341 ரூபாவிற்கும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 185 ரூபாவிற்கும் தொடர்ந்து விற்பனை செய்யப்படும்.(ம-7)

## எதிர்வரும்...

வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், திட்டமிட்டு எவரும் கைது செய்யப்படுவதில்லை. ஏனெனில் இவர்கள் யாரும் எமக்கு அரசியல் ரீதியில் சவாலானவர்கள் அல்ல. எமக்கு நாம் தான் சவால். நாம் இன்று சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தியுள்ளோம்.

ஒருநாளும் தமக்கு எதிராக சட்டம் செயற்படாது என நினைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபகஷக்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக இன்று சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக ரணிலுடன் ஒன்றிணைந்த அனைவருக்கும் நீதிமன்றில் வழக்குகள் உள்ளன. இவர்கள் ரணில் மீதுள்ள அன்பினால் ஒன்றுசேரவில்லை. மாறாக ரணிலுக்கு எதிராக சட்டம் செயற்பட்டு உள்ளது என்றால் அடுத்தது நாங்கள் தான் என்பதை அவர்கள் அறிவார்கள்.

மேலும், ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்கள் தொடர்பான தீர்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தத் தீர்ப்பை இவ்வாரம் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவிப்பார். இதன் பிரகாரம் புதிய சட்டம் நிறைவேற்றப்படும்.

எனவே எதிர்வரும் நாட்களில் ராஜபக்ஷக்கள் மீண்டும் மெதமுலனவுக்கு செல்ல நேரிடும். அனைவருக்கும் சட்டம் சமம் என்ற சட்டத்தின் ஆட்சியே முன்னெடுக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## யாழில்...

திணைக்கள உத்தியோகஸ்தர்கள் மூவர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இளைஞன் ஒருவர் மதுவரி திணைக்கள உத்தியோகஸ்தரினால் கைது செய்யப்பட்டார்.

கைதில் இருந்து குறித்த நபரை விடுவிக்க 30 இலட்ச ரூபாய் பணம் இளைஞனிடம் இலஞ்சமாக கோரியுள்ளனர். அதற்கு இளைஞன் சம்மதிக்காது 20 இலட்ச ரூபாய் கொடுப்பதற்கு சம்மதித்ததை அடுத்து இளைஞனை விடுவித்து சங்கானையில் உள்ள மதுவரி திணைக்கள அலுவலகத்திற்கு வந்து பணத்தினை தருமாறு கூறிச் சென்றுள்ளனர்.

அதனை அடுத்து தன்னிடம் இலஞ்சம் கோரிய விடயம் தொடர்பாக இளைஞன் காங்கேசன்துறை பிரிவு குற்றத் தடுப்பு பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

பொலிஸார் இளைஞனுடன் சிவில் உடையில் மதுவரி திணைக்களத்திற்கு சென்று இளைஞனை ஒரு தொகை பணத்தினை கொடுக்க வைத்து பணத்தினை பெற முயன்ற மூன்று அதிகாரிகளையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இலஞ்சமாகக் கொடுக்க முற்பட்ட ஒரு தொகை பணத்தினையும் சான்றுபொருளாக பொலிஸார் மன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.(ம-7,104,33)









## விசேட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பும் (02.09.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் (07.10.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை (07.10.2025) அன்றைய தினம் யாழ். மாவட்ட எல்லைக்குள் அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டு அனைவரும் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மேற்குறித்த நிகழ்வுகள் அனைத்தும் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நடைபெறும்.**


இரத்ததான நிகழ்வு எதிர்வரும் (05.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் நடைபெறும். மேற் குறித்த அனைத்து நிகழ்வுகளுக்கும் எங்கள் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நிர்வாகம்**
**யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
(5196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு நன்மை இருக்குமாயின் ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதி

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



**(கொழும்பு) ..........................**
**இந்தியாவா - சீனாவா அல்லது அமெரிக்காவா என்பது எமக்கு முக்கிய மில்லை நாட்டிற்கு கிடைக்கும் நன் மைகளின் அடிப் படையிலேயே உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை கடற்பரப்புக்குள் நுழைய இனி அனுமதியளிக்கப்படும் என துறை முகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத் நாயக்க தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

உலக நாடுகளின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது குறித்து தீர்மானிக்க வெளிவிவகார அமைச்சு விசேட குழு அமைத்து கலந்துரையாடி வருகிறது. இவ்வாறான ஆய்வுக்கப்பல்களின் வருகை குறித்து ஏனைய நாடுகள் முன்னெடுக்கும் பொறிமுறைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து பொதுவானவொரு திட்டத்தை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சீனா மாத்திரம் அல்ல வேறு எந்தவொரு நாட்டினதும் ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக்கு வருவதாயின், நாட்டிற்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மறுபுறம் இவ்வாறான ஆய்வுக்கப்பல்கள் வரும் போது உலகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதனையும் ஆராய வேண்டும். ஏனெனில் வல்லரசு நாடுகளுக்கு இடையில் போர் சூழலும் போட்டித்தன்மையும் நிலவுகின்றது.

எனவே ஏவுகணை தாக்குதல்கள், புவிசார் அரசியல் நலன்கள், ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் கலாசார விஜயங்கள் என பல கோணங்களில் ஆய்வுக்கப்பல்களின் வருகையை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே தான் உலக நாடுகளின் ஆய்வுக்கப்பல்கள் வருகையை விசேட கண்ணோட்டத்தில் நோக்குகிறோம்.

இந்த விடயத்தில் சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா என வேறுபடுத்தி பார்க்க விரும்பவில்லை. இறுதியில் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகளின் அடிப்படையிலேயே ஆய்வுக்கப்பலை அனுமதிப்பதா இல்லையா என்ற தீர்மானம் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# இந்திய மீனவர்களின் படகுகளை அப்புறப்படுத்தும் பணி தீவிரம்

(கொழும்பு)

மயிலிட்டி துறைமுக புனரமைப்பு பணிகளை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கவுள்ள நிலையில், மயிலிட்டி துறைமுக பகுதிகளில் உள்ள தமிழக கடற்தொழிலாளர்களின் படகுகள் ஜே.சி.பி வாகனம் மூலம் நொருக்கப்பட்டு அங்கிருந்து அப்புறப்படுத்தப்படும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்ட வேளைகளில் அவர்க ளின் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றி, மயிலிட்டி மீன்பிடி துறைமுக பகுதிகளில் தடுத்து வைத்திருந்தனர்.

அவ்வாறு 124 படகுகள் தற்போது மயிலிட்டி மீன்பிடித் துறைமுக பகுதிகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அத்துமீறி இலங்கை கடற் பரப்பினுள் நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நீதி மன்றங்களில் தனித்தனி வழக்குகளாக நடைபெற்று வரும் நிலைகளில் சில வழக்குகள் முடிவடைந்துள்ளன.

அவற்றின் அடிப்படையில் இது வரையில் முடிவுற்ற வழக்குகளில் 33 படகுகள் அரச உடமையாக்கப்பட்டுள்ளன. மேலும் 07 படகுகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஏனைய படகுகள் மீதான வழக்குகள் நீதி மன்றங்களில் நிலுவையில் உள்ளன.

இந்நிலையிலையே இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி மயிலிட்டி துறைமுக பகுதிக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், அரசுடைமையாக்கப்பட்ட 33 படகுகளையும் ஜே.சி.பி வாகனம் மூலம் நொருக்கி அவற்றை அச்சுவேலி தொழில் பேட்டைக்கு எடுத்து செல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (க-8-33)

# சமன் ஏக்கநாயக்கவுக்கு சி.ஐ.டி அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இங்கிலாந்துப் பயணம் மற்றும் வருகைக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலம் அளிக்க சமன் ஏக்கநாயக்கவை இன்று திங்கட்கிழமை முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது. (க-8)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி 2025.09.01 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS) பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

**திரு. சுப்பிரமணியம் புஸ்பரங்கன் (SLPS-2)**

அவர்களை பாராட்டுவதோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

(5182)

வாழ்த்துவோர்- பாடசாலை சமூகம் யா/மாதகல் சென் யோசப் மகாவித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் சாதனை



காலி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் 49 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வரலாற்றில் முதற்தடவையாக செல்வி.சசிகுமார் ஜெஸ்மிதா முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தங்கப்பதக்கத்தை வென்று பெருமை சேர்த்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பெண்களிற்கான குத்துச்சண்டைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்று இவ்வரலாற்றுச் சாதனையைப் புரிந்துள்ளார்.

அதேவேளை செல்வி இந்தர சேர்கரம் லாதுசனா தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் கிடைத்தாலும் தங்கப் பதக்கம் கிடைப்பது இதுவே முதற்தடவையாகும். (3)



தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையேயான பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியினர் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். (படம்:கனகராஜ்)



தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் வருடம் தோறும் நடத்தும் சதுரங்கப் போட்டி நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. (படம்- கஜிந்தன்)



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டியில் ஊர்காவற்துறை சென் அன்ரனிஸ் கல்லூரி அணியினர் வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளனர். (படம்:கனகராஜ்)

## தேசிய உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனானது வடமாகாண அணி



தேசிய மட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில் வடக்கு மாகாணம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அகில இலங்கை 49 ஆவது தேசிய விளையாட்டு விழா இடம்பெற்று வருகின்றது.

இதில் ஒரு அங்கமாக ஆண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் வட மாகாண அணியை எதிர்த்து சப்ரகமுவா மாகாண அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் விளையாடிக் கொண்டிருந்தனர். இருப்பினும் சப்பிரகமுவா மாகாண அணி முதல் கோலைப் போட இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் சப்ரகமுவ அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் வட மாகாண அணியினர் சிறப்பாக விளையாடியிருந்தனர். இரு அணிகளுக்குமான ஆட்டம் இரசிகர்களின் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இருப்பினும் வடக்கு மாகாண அணியைச் சேர்ந்த நிதர்சன் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்து ஆட்டம் சமநிலைக்கு வந்தது.

இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இருப்பினும் இரு அணிகளாலும் மேலதிக கோலைப் பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாண அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 2025 ஆம் ஆண்டின் சிறந்த உதைபந்தாட்ட வீரராக வட மாகாண அணியைச் சேர்ந்த நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு வாகனம் அரசாங்கத்தின் புதிய திட்டம்

(கொழும்பு)

அடுத்த வருட ஆரம்பத்தில் 2,000 கெப்ரக வாகனங்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத் தெரித்துள்ளார்.

அரச நிறுவனங்களின் தலைவர்களின் பயன்பாட்டிற்காக குறித்த வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவித்த அவர்,

அபிவிருத்தித் திட்டங்களை அடிமட்ட அளவில் செயற்படுத்த, உள்ளூராட்சித் தலைவர்களுக்கு கிராமப்புறங்களைச் சென்றடைவதற்கான வழிகளை வழங்குவது அவசியமானது.

அதிகாரிகள் அங்கு சென்று திரும்புவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க வேண்டும். எங்களுக்கு சில வாகனங்கள் தேவை. எனவே, நாங்கள் ஒரு முடிவை எடுத்துள்ளோம்.

நாட்டில் உள்ள ஒவ்வொரு அரச நிறுவனத் தலைவர்களுக்கும் அவர்களின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் 2,000 கெப்ரக வாகனங்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை செயற்படாத உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை மீண்டும் செயற்படுத்த பல புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)



வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பை வழங்கும் விடயத்தை கருத்திற் கொண்டு ESPD நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக Sihina Srilanka விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2025.08.20 ஆம் திகதி World vision , Fairmed, Reecha, Crafttary ஆகியோரின் அனுசரணையில் பரந்தன், "நீச்சாவில்" நடைபெற்றது.

# புங்குடுதீவில் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட வேண்டும்!

புங்குடுதீவு பிரதேசத்தில் தொடர்ச்சியாக நிலவி வருகின்ற அச்சநிலை காரணமாக மக்கள் அங்கிருந்து இடம் பெயரும் அபாயம் காணப்படுகின்றது எனவும் எனவே மக்களின் நலன் கருதி முக்கியமான சந்திகளில் பாதுகாப்புக் கமரா பொருத்தப்பட வேண்டும் என தீவகம் சிவில் சமூகத்தின் உபதலைவர் கருணாகரன் குணாளன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் சில நாட்களுக்கு முன்னர் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் பின்னர் புங்குடுதீவு பிரதேசத்தில் இரவு ஏழு மணியின் பின்னர் மயான அமைதி நிலவுகின்றது.

மக்கள் இரவு வேளையில் வெளியே நடமாட அஞ்சுகின்றனர். ஆலய திருவிழாக்களைக் கூட தவிர்த்து வருகின்றனர். இந்நிலையில் புங்குடுதீவின் முக்கிய சந்திகளில் சிறந்த தரம் வாய்ந்த (வாகன இலக்கத் தகடு தெரியக் கூடியதாக) பாதுகாப்பு சி.சி.ரிவி கமராக்களை பொருத்துவதன் ஊடாகவே இவ்வாறான குற்றங்களை கட்டுப்படுத்துவதோடு- நீதிமன்றத்திற்கு தேவையான ஆதாரங்களையும் வழங்கமுடியும். இதற்கான ஒத்துழைப்பினை புங்குடுதீவு மக்கள் வழங்க முன்வர வேண்டும் என மேலும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (30)

# மக்கள் சேவைக்கு மதிப்பளியுங்கள் துஷ்பிரயோகம் செய்தால் தூக்கி எறிவோம்

(கொழும்பு)

அரச சேவைக்கு பொறுத்தமற்ற 300 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இவ்வாண்டில் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

மஹரகம நகரசபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்க்கட்சிகள் அரச சேவையை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம்.

எவராயினும் நேர்மையாக பணியாற்றினால் யாருடைய அச்சுறுத்தலுக்கும் பயப்பட வேண்டிய நிலைமை ஏற்படாது. அரச உத்தியோகத்தர்கள் மக்களுக்கான சேவையை சரிவர நிறைவேற்றும் பட்சத்தில் நாம் அவர்களை பாதுகாப்போம்.

எவ்வாறிருப்பினும் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபவர்கள் தொடர்ந்தும் சேவையில் நீடிக்க முடியாது. இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 300 பொலிஸார் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

தவறிழைப்பவர்களை எக்காரணத்துக்காகவும் அரச சேவையில் வைத்திருக்கப் போவதில்லை. அதேபோன்று ஏனைய துறைகளிலும் சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அந்தந்த நிறுவனங்களின் பிரதானிகளுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (க-8)

# 'மாறும் நிழல்' திரைப்படம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களின் பங்களிப்பில் முழுமையாகத் தயாரித்து - இயக்கப்பட்ட திரைப்படமான "மாறும் நிழல்" இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (8-33)

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைகிறதா? ஐ.தே.க. மாநாட்டில் புது வியூகம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.


எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவுள்ள குறித்த மாநாடு தொடர்பில் கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சிகளுக்கு இடையேயான ஒற்றுமையின் முதல் படியாக இது இருக்கும் என்று குறிப்பிட்டதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேநேரம், ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து பிரிந்து சென்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையும் நீக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக, குறித்த மாநாட்டை பொதுவான ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கும் ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான பிளவுக்குப் பின்னர் சஜித் பிரேமதாசவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான உறவு வலுவடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், குறித்த மாநாட்டில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிக்கா குமாரதுங்க ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-8)


2 ஆம் ஆண்டு நினைவலைகள் 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்.திரு.
கார்த்திகேசு உருத்திரசுந்தரம்
திதி- ஆவணி வளர்பிறை நவமி
அன்னை மடியில் - 23.08.1943
இறைவனடியில் - 25.08.2023




அமரர்.திருமதி.
கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்
திதி - ஆவணிசதுர்த்தி
அன்னை மடியில் - 02.03.1946
இறைவனடியில் - 29.08.2014

அம்மா! அப்பா!
ஆண்டு ஒன்று இரண்டாகலாம்
பத்து பதினொன்று ஆகலாம்
எல்லாமே வெறும் எண்களே
ஆனால் உங்கள் நினைவுகள்
என்றுமே எங்கள் நெஞ்சங்களில்
பசுமரத் தாணி போலவே!

(5187)

புலம் வீதி, கைதடி மேற்கு, கைதடி.
தகவல்— குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா கடந்த 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள் உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.சுப்பிரமணி வழங்கவுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

## வாள்களுடன் நடமாடிய நால்வர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோணாவில் பகுதியில் வாள்கள் மற்றும் போதைப் பொருளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நான்கு சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை சோதனையிட்ட போது, மறைத்து வைத்திருந்த நான்கு வாள்கள் மற்றும் 07 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கிளிநொச்சி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)



# காரைநகர் களபூமி அருள்மிகு கற்பக விநாயகருக்கு இன்று (01.09.2025) அலங்காரத் திருவிழா!

**அச்சுதனின் நல்மருகா ஆனைமுகனே-திருச்சி**
**உச்சிமலை மீதிருக்கும் உத்தமனே அச்சிறுத்து**
**செல்வ விக்னேஸ்வரனே சிற்பரனே-என்மனத்தே**
**நல்விளக்காய் நிற்பாய் நயந்து**

இன்று பகல் 108 ஓமத்திரவியங்களால் யாகசாலையில் சிவாச்சாரியரது மந்திரமும் நூல்களும் திருமுறை ஓதியும் அக்கினி குண்டத்தில் சமர்ப்பித்து. இறை அருளை யாகத்தில் இருந்து பஞ்சகவ்வியங்கள். பஞ்சாமிதம். திருநீறு சந்தணத்தால் இறைவனைக் குளிர்வித்து ஓமக்கும்பத்தில் **எம்பெருமானது அருள்மிகு கும்ப நீரால் அபிசேகம் செய்து இறைவன் திருவருளைப் பெறுவோம்.**

இன்று இரவு எழுந்து அருள்மிகு விநாயகரை நறும் மலர்களால் அலங்கரித்து எங்கள் மனத்தில் பதியவும், **ஓதுவார் மூர்த்திகளால் வாடாத மாலையாகிய திருமுறைகளை இறைவன் திருவடிகளுக்கும், திருச்செவிக்கும் சாத்தியும் எம்பெருமானது பூரண பேரருள் கிடைத்தும், இந்த ஆலயம் முன்னோர் காட்டிய அன்பும் அறநெறியிலும் ஆலய வழிபாடும் அடியவர்கள் சிறக்கவும் நமது கிராமம் அறநெறியும் அமைதியும் பெற்று உய்ய பிரார்த்திப்போம்.**

வாதனக்கிரங்கல்-8 ஆவது-இராமலிங்கசித்தர்

**அந்நாளிலடிச் சிறியே னம்பலவா யிலிலே**
**அருளை நினைந்தொருபுறத்தே யயர்ந்தழுதுநின்றேன்**
**முன்னாளில் யான் புரிந்த பெருந்தவத்தா லெனக்கு**
**முகமலர்ந்து மொழிந்தவருண் மொழியை நினைந்தந்தச்**
**செந்நாளை யெதிர்பார்த்தே பன்னாளுங் களித்தேன்**
**சிந்தை மலர்ந்திருந்தெனச் செல்வமிகு திருநாள்**
**இந்நாளே யாதலினா லெனக்கருள் வீ ரென்றேன்**
**என்பதன்முன் னளித்தீர் நும் அன்புலகிற் பெரிதே**

அந் நாளில் அடிச்சிறியேன் கற்பக விநாயகா! உன் வாசலிற் கருளை நினைந்து ஒவ்வொரு வெள்ளியும் திருமுறைக் கூட்டுப் பிரார்த்தனையும், பலகாலமாக சேவியர் வேலுப்பிள்ளை அவர்களது நிர்வாகத்தில் அருள்மிகு விநாயகா! அருளைப்பெற்று நின்றேன்.

**“அந்நாளிலடிச் சிறியே னம்பலவா யிலிலே அருளை நினைந்தொரு புறத்தே யயந்தழுது நின்றேன்”** க.அமுதலிங்கம் நிர்வாகத்தில் அறிவின் கண் அறிவால் அறவழியில் நிதானமான வழிபாடும் பின் ஊர்மக்களும் சிவாச்சாரியாரும் ஒன்று கூடி ஆலய புணருத்தானம் செய்தும் மகா கும்பாபிசேகம் சிறப்புடன் நடைபெற்று **முதல் முதலில் 13 நாள் அலங்காரத்திருவிழாவும் நடாத்தி நாடும், மக்களும் சிறப்புற முன்னாளில் யான் புரிந்த பெருந் தவத்தா லெனக்கு முகமலர்ந்து மொழித்தவருண் மொழியை நினைந்த தந்து”** இவ்வாறு பேரருள் பெற்று அதன் பயனாக யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் ஆலயத்திலும் பரிவார மூர்த்தி உட்பட ஐந்து ஆலயத்திலும் **“ஓதுவார் மூர்த்தி”** ஆகவும் நல்லூர் அலங்காரா! சந்நதியில் திருப்புகழ் திருமுறைகளும் தினம் ஓதும் அருளும் கிடைத்தது. எம்பெருமான் நமது குல தெய்வம் பிள்ளையார் முன்னாள் நிர்வாகம் காட்டிய அருள்மிகு வழிபாடு எனவும் உணர்த்தியது **“செந்நாளை யெதிர்பார்த்தே பன்னாளுங்களித்தேன சிந்தை மலர்ந்திருந்தெனச் செல்வமிகு திருநாள்”**

இவ்வாறு எங்களது குல தெய்வ வழிபாடு அமைய வேண்டும். நாம் எல்லோரும் கற்பக விநாயகர் ஆலயத்தில் **முன்னோர் காட்டிய அருள்மிகு வழியிலும் இந்நாள் அமைய வேண்டும்** என அமைதி வழியில் திருமுறைகளை ஓதியும் வழிபாடுகள் பிள்ளையாரே அருள்வீரன்றே பிரார்த்திப்போம்.

**“இந்நாளே யாதலினா லெனக் கருள்வீ ரென்றேன்** முன்னர் வழியில் அமைந்த திருவிழா மாற்றிலும் **எல்லாம் எப்போ முடிந்த காரியம்”** எனும் **யோகர்** அருள் வழிகாட்டலும் **“எல்லாம் சிவன் செயல்”** என மாணிக்கவாசகர் திருவாசகமும் என இன்று இரவு கற்பக விநாயகர் சிறந்த மலர்களால் அலங்கரித்தும் வாடாத மாலைகளால் திருவீதியில் பாடியும், அன்பே சிவம் **“என்பதன் முன் னனிந்தீர் நும் அன்புலகிற் பெரிதே” “சித்தமெல்லாம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட”** மாணிக்கவாசகர் வாக்கு.

மனிதனின் உடலுக்குள்ளே இறைவனை இதயத்தில் இருத்தி இறைவனோடு இரண்டறக் கலந்த பேரானந்த நிலைக்கு பாமர மக்களது இதயத்தில் பதியும்படி தந்த சித்தர்களின் பாடல்கள் சில சிறு துளி பாடுவோம்.

பட்டினத்தார்: நினைமின் மனமே! நினைமின் மனனே 17 ஆவது பாடல் சிவபெருமானைச் செம்பொன பலவனே

**இருப்பது பொய் போவது மெய் என்றெண்ணி நெஞ்சே**
**ஒருத்தருக்கும் தீங்கினையுன் னாதே - பருத்ததொந்தி**
**நம்மது என்று நாம் இருப்ப நாய்நரிகள் பேய் கழுக**
**தம்மது என்று தாம் இருக்கும் தான்**

163 ஆவது பாடல்-அருள்புலம்பல்

**ஐங்கரனைத் தெண்ணிட்டே அருளடைய வேண்டுமென்று**
**தங்காமல வந்து ஒருவன் தன் சொருபம் காட்டி எனை**
**கொள்ளைப் பிறப்பு அறுக்கக் கொண்டான் குருவடிவம்**
**கள்ளப் புலன் அறுக்கக் காரணமாய் வந்தாண்டி!**

சிவவாக்கியர் 479 ஆவது ஞான நிலை. மதவதம் மறுத்தல். அறிவுநிலை

**தன்மசிந்தை ஆம்அளவும் தவமறியாத் தன்மையாய்க்**
**கன்மசிந்தை வெயில் உழன்று கருத்தமிழ்ந்த கசடரே**
**சென்மசென்மம் தேடியும் தெளிவொணாத செல்வனை**
**நன்மையாக உம்முளே நயந்து காண வேண்டும்.**

கடுவெளிச் சித்தர்: ஆனந்தக்களிப்பு பல்லவி

**பாபஞ்செய் யாதிரு மனமே-நாளைக்**
**கோபஞ்செய் தே யமன் கொண்டோடிப் போவான்**

19 ஆவது சரணங்கள் துதிக்கிற் பதவி அருளுவான் ஈசன்

**அன்பெனும் நன்மலர் தூவிப்-பர**
**மானந்தத் தேவின் அடியினை மேவி**
**இன்போடும் உன்னுடலாவி நாளும்**
**ஈடேற்றத் தேடாய் நீ இங்கே குலாவிட**
**பாபஞ்செய் யாதிரு மனமே!**



**வானுலகும் மண்ணுலகும் வாழ, மறை வாழப்**
**பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க**
**ஞானமத, ஐந்துகா, மூன்று விழி நால்வாய்**
**ஆனைமுக னைப் பரவி அஞ்சலி செய் இற்போம்**

உமாபதி சிவம் அருளியது

**மேன்மைப் பாடுவாய் மனமே கேள்;**
**விண்ணின் இடிமுன் விழுந்தாலும்**
**பான்மை தவறி நடுங்காதே!**
**பயத்தால் ஏதும் பயன் இல்லை;**
**யான் முன் உரைத்தேன் கோடிமுறை;**
**இன்னும் கோடி முறை சொல்வேன்**
**ஆன்மா ஆன கணபதியின்**
**அருள் உண்டு அச்சம் இல்லையே**

மகாகவி பாரதி

சுவாமி விவேகானந்தர் 27.01.1897 இல் இராமேஸ்வரத்தில் “**உண்மையான வழிபாடு அன்பே சமயம் தூய உள்ளன் பிலன் நிப்புறச்சடங்குகளால் சமயம் நிலைப்பதில்லை. உடற்சுத்தமும் உள்ளத்தூய்மையுமின்றி இறைவனை வழிபடுவதில் பயனில்லை.**

இந்த வகையில் இங்கு தரப்பட்ட பாடல்கள் திருமுறைகள் ஓதினால் மற்றவர்களுடைய துர் எண்ணம், ஏதும் நம்மைப் **பாதியாமல்...** மகாகவி பாரதி ஆகாயத்தில் இருந்து இடி விழுந்தாலும் கெட்டுப்போய் விலவிலத்து அஞ்சி நடுங்காதே. எப்பொருட்கும் உட்பொருளாய்-உயிர்க்கும் உயிராய் விளங்கும் கணபதியே! நல்லார் உரைத்த சொல் கேட்டிடுதல் வேண்டும்; அவர் நட்பு மறவாமை வேண்டும். விநாயகர் அகவல் தினம் ஓதுவோம் ஒன்றுக்கும் பற்றாத சிற்றறிவுடையோனை எங்கள் குலமுதலாம் களபூமி கற்பக விநாயக தெருவடிப் பிள்ளையார் திருவடி மலரினைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குகிறேன்.

**தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட வித்தக விநாயக விரைகழல் சரணே**



**க.கு.க. சிவபாலன்**

(C-377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
# துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/ 2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments/2442 Commission%20Circular%20No.%2003-2023.pdf. இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் வரைக்கும் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி மற்றும் புதுமை, புலமைப்பரிசில் மற்றும் சமூக ஈடுபாடு புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் ஒன்பது பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் (எல்லாமாக 12 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதின்நான்காயிரத்து முந்நூறு பட்டதாரி மாணவர்களையும் ஆயிரத்து முந்நூறு உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர் பார்க்கப்படுகிறார்.

1. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழகத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவரா கவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்ளைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

   துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

   துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

   யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

   துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

2. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.
   1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
   2. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
   3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
   4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

   விண்ணப்பங்கள் "பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்" என முகவரியிட்டு மூடிய கடித உறையில் **15.10.2025** அன்று பி.ப **3.00** மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

   மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: registrar@univ.jfn.ac.lk இற்கு 15.10.2025 அன்று முடிவடை வதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக பேரவைச் செயலாளரினால் சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்ற முடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறி வித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

   ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

   விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

   முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**பதிவாளர் அலுவலகம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**திருநெல்வேலி**
**01.09.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தீர்ப்புத் தவறானது துள்ளிக்குதிக்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

"வரிகள் இன்னும் அமுலில் இருக்கின்றன. அவற்றை நீக்கினால் அமெரிக்காவை அழித்துவிடும்" என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பை ட்ரம்ப் கடுமையாக சாடியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே, ட்ரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தற்போது அவர் வரி யுத்தத்தில் இறங்கி இருக்கிறார். இதுவரை இல்லாத அளவுக்கு, பல்வேறு நாடுகளுக்கு, அதிக வரிகளை விதித்து அதிரடி காட்டி உள்ளார்.

தற்போது, அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம், ட்ரம்பின் பெரும்பாலான வரிகள் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பினை ட்ரம்ப் கடுமையாக எதிர்த்து உள்ளார். இது குறித்து, ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்து வரி விதிப்புகளும் இன்னும் அமுலில் உள்ளன.


மேல்முறையீட்டு நீதிமன்றம் நமது வரி விதிப்புகளை நீக்க வேண்டும் என்று தவறாகக் கூறி இருக்கிறது. ஆனால் இறுதியில் அமெரிக்கா வெற்றி பெறும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

இந்த வரிவிதிப்புகளை நீக்கினால், அது நாட்டிற்கு முழுமையான பேரழிவாக இருக்கும். அது நம்மை நிதி ரீதியாக பலவீனப்படுத்தும்.

பல ஆண்டுகளாக, நமது அக்கறையற்ற மற்றும் விவேகமற்ற அரசியல்வாதிகளால் நமக்கு எதிராக வரிவிதிப்புகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

இப்போது, அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் உதவியுடன், அவற்றை நமது தேசத்தின் நலனுக்காகப் பயன்படுத்துவோம். மேலும் அமெரிக்காவை மீண்டும் பணக்காரர், வலிமையானவர் மற்றும் சக்தி வாய்ந்தவராக மாற்றுவோம். இவ்வாறு ட்ரம்ப் கூறியுள்ளார். (க-8)

## பாகிஸ்தானில் பயங்கர மழை! இரக்கம் காட்டுமா இயற்கை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டுள்ள சூழலில், அங்கு கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 30 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டில், மக்கள் தொகை அதிகம் நிரம்பிய பஞ்சாப் மாகாணத்தில், கடந்த ஒருவாரமாக வெள்ளம் ஏற்பட்டு சுமார் 1,700 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில், மீண்டும் கனமழை பெய்து வரும் சூழலில், அங்குள்ள நீர்நிலைகள் முழுவதுமாக நிரம்பி வெள்ளத்தின் பாதிப்புகள் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. இதில், சுமார் 15 லட்சம் மக்கள் தங்களது வீடுகளை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, பஞ்சாப் மாகாண அமைச்சர் மர்யும் ஔரங்கசீப் கூறுகையில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் பஞ்சாப்பில் வெள்ளத்தில் சிக்கி 30 பேர் பலியானதாகவும், 3 நாட்களில் மட்டும் சுமார் 5 லட்சம் பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ரவி, செனாப் ஆகிய நதிகளில் வெள்ளம் அதிகரித்து வருவதால், முக்கிய நகரங்கள் வெள்ள நீரில் மூழ்குவதைத் தவிர்க்க மண்டி பஹாவுத்தீன், சினியோட் உட்பட 7 பகுதிகளில் உள்ள நதிக்கரைகள் அதிகாரிகளால் வெடி வைத்து தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பில் வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி வரை கனமழை நீடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து வெளியேற்றப்பட்ட லட்சக்கணக்கான மக்கள் சுமார் 351 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-8)

## புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு கவிழ்ந்ததில் 50 பேர் பலி



(நவாக்சோட்)

மொரிடேனியா நாட்டின் ஹிஜிரட் நகர் அருகே கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 50 பேர் உயிரிழந்துள்ள நிலையில், 100 பேர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.


பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் புகலிடக் கோரிக்கையாளர்களாக கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள காம்பியா, செனகல் நாடுகளை சேர்ந்த 150 இற்கும் மேற்பட்டோர் ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைய மத்திய தரைக்கடல் வழியாக படகில் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மொரிடேனியா நாட்டின் ஹிஜிரட் நகர் அருகே கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது புகலிடக் கோரிக்கையாளர்கள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவலறிந்து விரைந்து சென்ற மொரிடேனியா கடற்படையினர் கடலில் மூழ்கி உயிருக்கு போராடிய 17 பேரை மீட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் 50 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 பேர் மாயமாகினர். இதையடுத்து, மாயமானவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். (க-8)

## இஸ்ரேலின் தாக்குதலில் ஏமன் பிரதமர் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஏமன் பகுதியின் பிரதமர் அஹமட் அல் - ரஹாவி கொல்லப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சனாவில் நடந்த தாக்குதலில் அவரும் சில அமைச்சர்களும் கொல்லப்பட்டதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் ஹவுதி தலைமையிலான அரசாங்கத்தின் பிரதமராக அஹமட் அல்-ரஹாவி பணியாற்றி வந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

# உலக நாடுகள் மீதான வரிவிதிப்பு சட்டத்திற்கு முரணான செயல்

## அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்பின் தான்தோன்றித்தனமான வரிவிதிப்பு, சட்டத்திற்கு முரணானது என அமெரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது.**



அமெரிக்காவின் ஜனாதிபதியாக இரண்டாவது தடவை தெரிவு செய்யப்பட்ட ரொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவுக்கும் அமெரிக்கர்களுக்கும் நன்மை செய்கிறேன் எனக்கூறிக் கொண்டு உலக நாடுகள் அனைத்திற்கும் இறக்குமதி வரியினை எல்லையின்றி அதிகரித்திருந்தார்.

இது சட்டவிரோதமான செயல் எனத் தெரிவித்து அவரின் வரிவிதிப்பிற்கு எதிராக அமெரிக்கா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்குறித்த விடயம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த தீர்ப்பில், உலகில் உள்ள அனைத்து நாடுகளின் பொருட்கள் மீது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் இறக்குமதி வரிகளை விதிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு சட்டபூர்வ உரிமையில்லை.

இதுபோல இறக்குமதி வரிகளை விதிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு வரம்பற்ற அதிகாரத்தை அளிப்பது அமெரிக்க பாராளுமன்றத்தின் நோக்கமல்ல என்று தெரிவித்தது.

இதன் மூலம், இந்த வழக்கில் நியூயோர்க் வர்த்தக நீதிமன்றம் ஏற்கெனவே அளித்த தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

அதேவேளையில் இந்த வரிகளை மேல்முறையீட்டு நீதிமன்றம் ரத்து செய்யவில்லை. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவும் அந்நாட்டு அரசுக்கு அந்த நீதிமன்றம் அனுமதியளித்தது.

நீதிபதிகள் அமர்வில் 11 நீதிபதிகள் இடம்பெற்ற நிலையில், 7 நீதிபதிகள் இந்தத் தீர்ப்பை அளித்தனர். 4 நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினர். இதையடுத்து பெரும்பான்மை நீதிபதிகள் அளித்த தீர்ப்பு இறுதி செய்யப்பட்டது. (க-8)

# ஈழத்தமிழினத்திற்கு நீதி கோரி லண்டனில் மாபெரும் போராட்டம்



(லண்டன்)

ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்டடோருக்கு சர்வதேச நீதி கோரி லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று முன்தினம் லண்டனில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் முன்பாக ஆரம்பித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் அங்கிருந்து டவுனிங் வீதி வரை ஊர்வலமாக சென்றடைந்தது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் "யுத்தத்தின் போதும், யுத்தத்திற்கு பின்னரும் வலிந்து கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நடந்தது என்ன..? காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேச நீதி தேவை, இலங்கையை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்து, இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும்" போன்ற பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க-8)

# எம் வயிற்றில் அடித்து எம்.பிக்களுக்கு சம்பளமா?


## இந்தோனேசியாவில் மக்கள் போர்க்கொடி

(ஜகார்த்தா)

தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் ஒன்றான இந்தோனேசியாவில் சமீப காலமாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. ஆனால் அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுமார் 5 லட்சம் ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகிறது.

இது அந்த நாட்டு மக்களின் சராசரி வருமானமான ரூ.17 ஆயிரத்தை விட பல மடங்கு அதிகம். எனவே அவர்களின் சம்பளத்தை குறைக்க வலியுறுத்தி பொதுமக்கள் பாரிய போராட்டத்தில் குதித்தனர்.

தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள பாராளுமன்றத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.



எனவே போராட்டத்தைக் கலைக்க அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். அதன்பின் தடியடி மற்றும் கண்ணீர் புகைக்குண்டு வீசி போராட்டத்தைக் கலைக்க முயன்றனர்.

இதையடுத்து மக்காசரில் உள்ள நகர்மன்ற அலுவலகம், பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட அரசு கட்டடங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். இதனால் அந்தக் கட்டடம் கொழுந்து விட்டு எரிந்து நாசமாகியது.

இந்தச் சம்பவத்தில் 3 அரசு ஊழியர்கள் உடல் கருகி பலியாகினர். 5 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. இதுதொடர்பாக 7 பேரை பொலிஸார் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தால் நாடு முழுவதும் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த நிலவு இலங்கையில் தென்படும்

(கொழும்பு)

2025 செப்ரெம்பர் 7 மற்றும் 8ஆம் திகதிகளில், வானில் கண் கவர் நிகழ்வாக, நிலவு ஆழ்ந்த இரத்தச் சிவப்பு நிறத்தில் காட்சி யளிக்க உள்ளது. இது, ஃப்ளட் மூன் என அழைக்கப்படும் முழு மையான சந்திர கிரகண நிகழ்வு. இதை இலங்கையில் தெளிவாகக் காணலாம் என கொழும்பு பல்கலைக்கழக இயற்பியல் துறைப் பேராசிரியர் சந்தண ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

முழுச் சந்திர கிரகணம் நிக ழும்போது, பூமி சரியாகச் சூரியனுக்கும் முழு நிலவுக்கும் இடையே வரும். இதனால், பூமியின் இருண்ட நிழல் (umbra) நிலவின் மீது முழுமையாகப் படர்ந்துவிடும்.

சூரிய கிரகணத்தைப் போல நிலவு முற்றிலும் இருண்டு போகாது. மாறாக, பூமியின் வளிமண்டலம் வழியாகச் சூரிய ஒளி வளைந்து செல்வதால், நிலவு சிவந்த நிறத்தில் ஒளிரும். இந்தச் சிவந்த நிறத்திற்குப் பின்னால் “ரேலே சிதறல் (Rayleigh scattering) என்ற அறிவியல் நிகழ்வு உள்ளது. சூரியன் உத யமாகும்போதும், அஸ் தமிக்கும்போதும் வானம் சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறங்களில் தோன்றுவதற்கும் இதுவே கார ணம்.

செப்ரெம்பர் 7ஆம் திகதி நிகழும் சந்திர கிரகணம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், இதன் முழுமையான நிலை சுமார் 82 நிமிடங்கள் நீடிக்கும். இது சமீப காலத்தில் காணப்பட்ட மிக நீண்ட சந்திர கிரகணங்களில் ஒன்றா கும்.

இந்த அற்புதமான நிகழ்வை ஆசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் காணலாம். மேலும், உலகின் சுமார் 87% மக்கள் இந்த வானியல் அதிசயத்தை நேரடியாகக் காண வாய்ப்புள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (க-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 80 | 150 | 140 | 200 |
| தக்காளி | 250 | 250 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 200 | 300 | 230 | 300 |
| கரட் | 400 | 450 | 400 | 450 |
| பூசணி | 100 | 60 | 60 | 60 |
| புடோல் | 100 | 150 | 80 | 120 |
| வாழைக்காய் | 120 | 150 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 300 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 450 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 120 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 200 | 400 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 180 | 250 |
| பீற்றூட் | 100 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 600 | 500 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 40-120 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 500 | 300-400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 450 | 1000 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 250 | 600 |
| முள்ளங்கி | 120 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 80 | 200 |

# இன்று ஒரு தகவல் 438



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குணமும் செயலும்!

ஒரு இளம் துறவி வந்தார்.

அங்கேயிருந்த ஒரு அன்னையின் முன்னால் நின்றார்.

“அம்மா! நான் அமெரிக்காவுக்குப் போறேன். என்னுடைய பிரயாணம் நல்லபடியா அமைய வேண்டும்! அங்கே என்னுடைய பணிகள் எல்லாம் வெற்றிகரமா முடிய வேண்டும். அதற்கு நீங்கள் என்னை ஆசிர்வதிக்க வேண்டும்.” - என்றார்.

அந்த அன்னை இதை காதிலே வாங்கினதாகத் தெரியவில்லை. அவர்கள் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து பார்வையை லேசா திருப்பினார்கள். இதுதான் சமயம் என்று பார்த்து அந்த இளம் துறவி மறுபடியும் தன்னுடைய வேண்டுகோளைச் சொன்னார்.

அவர்கள் இதைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை... என்னமோ யோசனையிலேயே இருந்தார்கள். கொஞ்ச நேரம் கழித்து அந்த இளம்துறவியிடம் வேறு என்னமோ பேச ஆரம்பித்தார்கள்.

“மகனே! நீ எனக்கு உதவி செய்ய வேண்டுமே!” அப்படி என்றார்கள்.

“என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க. உடனே செய்கிறேன்!”-என் றார் இவர்.

“வேறே ஒன்றுமில்லை... இதோ பக்கத்துலே இருக்கிற அந்த அறைக்குப்போ... அங்கே அந்த கதவுக்குப் பின்னால் ஒரு கத்தி இருக்கு. அதை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடு! அவ்வளவு தான்!” என்றார்கள். இளந்துறவி யோசிச்சார்:

“என்ன இது... நாம் கேட்பது ஆசீர்வாதம்... அவங்க கேட்கிறது கத்தி... ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாமே இருக்கே!” என்று நினைத்தார். அவருக்கு குழப்பமா இருந்தது.

இருந்தாலும் அதைப் பற்றிமேற்கொண்டு எதுவும் அவர் யோசிக்க வில்லை... நேரா போனார்... அந்த கத்தியை எடுத்துக் கொண்டு வந்தார்.

“இந்தாங்கம்மா... கத்தி!-என்றார். அந்த அம்மா அதை கவனமா வாங்கிக் கொண்டார்கள்.... அதுக்கப்புறம் சொன்னங்க, “மகனே... உன்னுடைய பயணம் நல்லபடியா அமையட்டும்.. போயிட்டுவா! என்று கையை உயர்த்தி அந்த இளந்துறவியின் தலையிலே வச்சு ஆசி வழங்கி னார்.

“அம்மா... இந்தக் கத்திக்கும் உங்கள் ஆசீர்வாதத்துக்கும் என்ன சம்பந்தம் எனக்கு விளங்கவில்லையே!” என்றார் இவர். இப்போ அந்த அன்னை விளக்கம் கொடுக்கிறார்கள்.

“மகனே..! நீ இந்தக் கத்தியை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தாய்! அப்படி கொடுக்கிறபோது... கத்தி இருக்கிற கூரான பகுதியை உன் பக்கம் இருக்கறமாதிரி பிடித்துக் கொண்டு, கைப்பிடி இருக்கிற ஆபத்தில்லாத பகுதியை என்பக்கம் நீட்டி கொடுத்தாய்.

இதுலே இருந்து நான் என்ன தெரிந்து கொண்டேன் என்றால் எந்த ஒரு செயலைச் செய்கின்ற போதும் அதனாலே ஏற்படக்கூடிய தீமைகளை நீ ஏற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு நன்மையே செய்வாய் என்கிறதைப் புரிந்து கொண்டேன். இந்த உயர்ந்த குணம் எல்லாருக்கும் வராதே!”- என்றார்கள்.

அம்மா இதையெல்லாம் நான் யோசித்து அப்படிச் செய்ய வில்லை. நீங்க கத்தியை என்னிடமிருந்து வாங்கிறப்போ- கூரியமுனை உங்களைக் குத்திவிடப்போகுது என்பதற்காக அந்தக் கைப்பிடியை உங்கள் பக்கம் நீட்டினேன்! அவ்வளவுதான்!”. என்றார் இவர்.

“உன்னை அறியாமலேயே மற்றவர்களுக்கு நன்மை செய்யிற இயல் பான குணம் உனக்கு இருக்கு! அந்த இயல்பு இன்னமும் உயர்ந்தது!

அந்த குணம் எப்பவும் உன்னை அடுத்தவங்களுக்குத் தீங்கு செய்ய விடாது. மறுபடியும் ஆசீர்வாதம் செய்தார்கள் அந்த அம்மா! இது மாதிரி ஒவ்வொருத்தர் செயலே அவங்க அவங்க குணம் எப்படி என்பதைக் காட்டிக் கொடுத்துவிடும்.

நம்ம ஆளுங்க சிலபேரை கத்தியை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுங்க... முகத்துக்கு நேரா குத்துறது மாதிரி கொண்டு வந்து கொடுப்பான்!

புத்தியை பயன்படுத்தத் தெரியாதவங்களுக்குக் கத்தியையும் பயன்படுத்தத் தெரியாது... அதனாலேதான் அது வன்முறைக்கு உபயோ கப்பட ஆரம்பித்துவிட்டது! அந்தக் கத்தி அவனுக்கு இடைஞ்சலா வந்து முடியும்.

சமூக விரோதிகள் இரண்டு பேர். ஒரு காரிலே போய்க் கொண்டிருந்தார் கள். ஒருத்தன் கார் ஓடுகின்றான். இன்னொருத்தன் ஒரு வெடிகுண்டை பத்திரமா மடியிலே வைத்துக் கொண்டு போறான். ரோடு குண்டும் குழியுமா இருந்தது. வெடிகுண்டு வைத்திருந்தவன் சொன்னான்: “டேய்.. காரை மெதுவா ஓட்டுடா... கார் ஆடுற ஆட்டத்திலே இந்த வெடிகுண்டு வெடிச்சுடப் போகுது!” - அப்படி என்றான்.

அதுக்கு அவன் சொன்னான். “அதுக்காக கவலைப் படாதடா.. அப்படி ஏதாவது ஆயிட்டா..உபயோகப்படுமேங்கறதுக்காகத்தான் உனக்குத் தெரியாமலே இன்னொரு வெடிகுண்டு எடுத்து வைத்திருக்கிறேன்.. இந்தக் காரோட டிக்கியிலே என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இலுப்பை எண்ணெய்

Botonical Name-
Madhuca longifolia
Family - Sapotaceae.

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை" என்பது பழமொழி. ஆங்கிலத்தில் இலுப்பை மரத்தை Mahua tree என அழைப்பர். பண்டைய காலத்தில் மன்னர்கள் இலுப்பை மரங்களைப் பயிரிட்டு பாதுகாத்தனர். இப்பவும் இலுப்பைக் குளம் என்ற பெயர் உண்டு. ஆனால் இன்று இலுப்பை மரங்கள் அருகி அழிந்து வருவது கண்கூடு. பாரம்பரிய மன்னர் இலுப்பை பூக்களிலிருந்து உடலிற்கு தீங்கு விளை விக்காத சோமபானம் தயாரித்து பயன்படுத்தி வந்துள்ளார்கள்.


பழந்தமிழர் வாழ்வில் இருளை விலக்கிய பெருமை இந்த இலுப்பைக்கு உண்டு. மின்சாரம் இல்லாத காலத்தில் இலுப்பை விதையிலிருந்து தயாரிக்கப்படும். இலுப்பை எண்ணெயிலிருந்து தான் கோயில்களில், வீடுகளில் விளக்கு ஏற்றினார்கள். இலுப்பை எண்ணெயில் விளக்கு எரியும் போது இதமான, இயற்கையான வாசனை காற்றில் பரவும். ஆனால் தற்காலத்தில் பயன்படும் எண்ணெய்களில் வாசனை வீசுவது இரசாயனப் பொருட்களை செயற்கையாகச் சேர்ப்பதனால் ஆகும்.

ஆனால் இலுப்பை எண்ணெயில் இயற்கையாகவே சுகந்தம் வீசும். இதனால் சுற்றுச்சூழல் தூய்மை அடையும். மேலும் இலுப்பை எண்ணெய் நின்று நிதானமாக எரியக் கூடியது. அந்தக் காலத்தில் தீப்பந்தங்கள் கூட இலுப்பை எண்ணெய் ஊற்றி பயன்படுத்தப்பட்டது. இரவு நேரத்தில் பயன்படுத்துவதால் நீண்ட நேரம் எரியும். பாரம்பரியமாக இலுப்பை மரத்திலிருந்து தொட்டில் கட்டி அதில் குழந்தைகளை உறங்கவைப்பதுமுண்டு.

இவ்வாறு எம் முன்னோர்கள். இயற்கையோடு இணைந்த ஆரோக்கியமான நீண்ட வாழ்க்கையை வாழ்ந்துள்ளார்கள். விதைகளிலிருந்து ஊறிய இலுப்பை எண்ணெயை பலகாரம் தயாரிக்க, அசைவ உணவுகளை பொரிக்க மற்றும் தாளிப்பதற்கு என பல வகைகளில் மக்கள் பயன்படுத்தி செய்ததால் அவையே வாசனையும், சுவையும் உள்ளதாக இருக்கும்.

சிவனுக்கு உகந்த எண்ணெயில் முதன்மையாக கருதப்படுவது இலுப்பை எண்ணெய். இது நெய் போன்று லேசான கெட்டியாக இருக்கும். பல மருத்துவ குணங்களைக் கொண்ட இலுப்பை எண்ணெயினால் தீபம் ஏற்றுவதால் நேர்மறையான சக்திகள் வீட்டிற்குள் ஈர்க்கப்படும்.

இதனால் வீட்டுக்குள் இருக்கும் எதிர்மறைசக்திகள் வெளியேறி வீட்டில் மாங்களாங்கள் பெருகச் செய்யும்.அதாவது சித்த மருத்துவமானது வெறுமனே உடல், உள , சமூக ஆரோக்கியமி ன்றி



மன அழுத்தம் இன்றிய வாழ்வியலுக்குரிய ஆன்மீக ஆரோக்கியங்களையும் வலியுறுத்தியுள்ளது. இடுப்புவலிக்கு இந்த எணணெயை தடவிவர நல்ல பலன் கிடைக்கும் அல்லது ஒரு கரண்டியில் இலுப்பை எண்ணெய்விட்டு சிறிது பச்சைக் கர்ப்பூரம் சேர்த்து உருக்கி இதமான சூட்டில் இடுப்பு, முழுங்கால் வலியுள்ள இடங்களில் பூசிவர வலி , வேதனை குறையும். பாரம்பரிய மருத்துவத்தில் உடலுக்கு வலிமை தரும் எண்ணெயாக கருதப்பட்டு பயன் படுத்தப்பட்டுள்ளது. அதாவது நமது முன்னோர்களும் சித்தர்களும் சொல்லி எழுதி வைத்துச் சென்ற அருமையான ஒரு மருந்து இந்த இலுப்பை எண்ணெய்.

மனித உடலின் நாடி, நரம்புகளை முறுக்கேற்றும் தன்மை உடையது. நச்சு பூச்சிக்கடி, கரப்பான் போன்ற தோல் நோய்களுக்கு பூசி வர எளிதில் குணமடையும். இடுப்பு வலி, மூட்டு



வலி, கை, கால்களில் வலி ஆகியவற்றிற்கு இந்த எண்ணெய்யை சிறிது மென்மையாக சூடேற்றி அதைத் தடவி பின்னர் மிதமான வெந்நீரில் சுத்தம் செய்து தூய்மைப்படுத்திக் கொண்டால் எளிதில் குணமடையும், சருமத்தை மிருதுவாக்கி, தோல் சுருக்கங்களை நீக்கும் தன்மை வாய்ந்தது.

காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் ஒரு சில துளிகளை இந்த எண்ணெயை சாப்பிடுவதன் மூலம் இந்த மாதிரியான அதாவது வயிற்றுப் பொருமல், வயிற்றுப்போக்கு தோல் நோய்கள் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளலாம்.

கோடை காலத்தில் ஏற்படும் வெப்பத்தாலும், சிலருக்கு இரவு நேரங்களில் அதிக நேரம் விழித்திருப்பதாலும் உண்டாகக் கூடிய கண் எரிச்சல், கண் அயர்ச்சி, கண் வலி போன்ற பிரச்சினைகளுக்கு இது அருமையான மருந்து ஆகும்.அதற்கு இலுப்பை எண்ணெயை அடிக்கடி தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் மேற்கண்ட பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம். கண் பார்வையும். மிகத் தெளிவாக அமையும். கச நோய், ஆஸ்துமா நோயின் தாக்கம் உள்ளவர்கள் சில துளிகள் இலுப்பை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

எண்ணெயை காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர நல்ல பலன் கிடைக்கும் அத்துடன் வயிற்றில் செரிமான மண்டலத்தை சீர் அடையச் செய்து மலச்சிக்கலை தவிர்க்கும் தன்மையும் உண்டு.

வாரம் ஒருமுறையாவது இலுப்பை எண்ணெயை உடல் முழுவதும் பூசி, அது நன்கு ஊறிய பின்பு குளித்து வருவதால் தோல் சம்பந்தமான அனைத்து வியாதிகளும் நீங்கும்.

இரவு உறங்கச் செல்லும் முன்பு இலுப்பை எண்ணெய் 3 துளிகளுடன், தேன், வெள்ளைப் பூண்டுச் சாறு ஆகியவற்றை அதேயளவு சேர்த்து கலந்து சாப்பிட்டு வந்தால் ஆஸ்மா போன்ற சுவாசக் கோளாறுகள் நீங்கும்.

இலுப்பை எண்ணெயில் Lacto genic பண்புகள் உள்ளன.

அதாவது தாய்மார்களுக்கு தாய்ப் பாலைத் தூண்டும் இயற்கையாகவே இலுப்பைப் பூக்களை நொதிக்கச் செய்து மதுவை உற்பத்தி செய்யலாம்.பூக்களில் விற்றமின்கள், சர்க்கரைகள், அமினோ அமிலங்கள், ஆர்கானிக் அமிலங்கள், நொதியங்கள் மற்றும் பிற கவலைகளும் காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே எம் மக்கள் மீண்டும் இலுப்பை எண்ணெய் பாவனையை அதிகரிக்க வேண்டும். ஆடி, ஆவணி இலுப்பை விதைகள் சேகரிக்கக் கூடிய காலமுமாகும்.

## இராசிபலன்

01.09.2025
ஆவணி 16 , திங்கட்கிழமை
நவமி பின்னிரவு 12.45 மணிவரை

கேட்டை முன்னிரவு 7.03 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை.

வளவன்




வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.




மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.




உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் தீரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




எடுத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, உறவினர் பகை மாறும்.




வெளியூர் பயணங்கள் எண்ணியபடியே கைகூடும், என்றோ நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.




கனவு பலிதமுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், வியாபார வளர்ச்சியுண்டு, ஆரோக்கியம் சீராகும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.




மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.




எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனக்குழப்பம் தீரும் வாய்ப்புண்டு.

அதிகம் பொ[illegible] வைத்தியம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்

## மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும்!



கிரக நிலை - தைரிய ஸ்தானத்தில் குரு - சுக ஸ்தானத்தில் சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன் - லாப ஸ்தானத்தில் சனி (வ), ராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15.09.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடும் மேஷ இராசியினரே இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக் கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். சற்று கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள்.

குடும்பத்தில் வெளி நபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனையைக் கேட்பதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பிள்ளைகளின் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சக கலைஞர்களிடம் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். கோபத்தைக் குறைத்து தன்மையாக பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.




அரசியல் துறையினர் தேவையற்ற அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்யத் தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

**அஸ்வினி:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத ஒரு விடயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளால் திடீர் செலவு உண்டாகலாம்.

**பரணி:** இந்த மாதம் யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வீண் மனக் கவலை, காரிய தாமதம் உண்டாகலாம் கவனம் தேவை. பணவரத்து அதிகரிக்கும். வாக்குவன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலை தூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபாரம், தொழில் தொடர்பான கடித போக்கு சாதகமான பலன் தரும். புதிய ஓர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். பணியாளர்கள் மூலம் நன்மை உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். கௌரவம் கூடும். நிலுவைத் தொகை வந்து சேரும். பதவி உயர்வு கிடைக்கலாம்.


**பரிகாரம்:** செவ்வாய் கிழமையில் நவக்கிரகத்தில் செவ்வாயை அர்ச்சனை செய்து தீபம் ஏற்றி வணங்குவது வாழ்வில் முன்னேற்றத்தை தரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு - செவ்வாய் - வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28.

**அதிஷ்ட தினங்கள்:** 19, 20, 21;

## பணவரத்து அதிகரிக்கும்!



**கிரக நிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் சூரியன், புதன், கேது - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் சனி (வ), ராகு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 11.09.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.09.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து செவ்வாய் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 15.09.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.09.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து சூரியன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 29.09.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் இருந்து புதன் ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** பிரச்சனைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகு முறையால் வெற்றி காணும் ரிஷப ராசியினரே இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெற போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும்.

தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். நயமாகப் பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருட்களைக் கவனமாகவும் பாதுகாப்பாகவும் வைப்பது நல்லது.

குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். மனதில் ஏதாவது கவலை இருந்து வரும்.

கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். சக கலைஞர்களிடம் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். கோபத்தை குறைத்து தன்மையாக பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.

அரசியல் துறையினருக்கு தேவையற்ற அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. எல்லா வகையிலும்




நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம்.

மாணவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக் கூடும். நன்கு படிப்பது நல்லது. பெற்றோர் ஆதரவு பெருகும். வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**ரோகிணி:** இந்த மாதம் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலை தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. திறமை அதிகரிக்கும். உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.

**மிருகசிரீடம் 1, 2, ஆம் பாதங்கள்:** இந்த மாதம் செல்வ சேர்க்கை உண்டாகும். எந்த ஒரு வேலையும் மன திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தனாதிபதி சுக்கிரன் சஞ்சாரத்தால் பண வரவு அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமையில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்குத் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன் - வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 2, 3, 29, 30

**அதிஷ்ட தினங்கள்:** 22, 23.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் நம்புவது அபாயகரமானது ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாய கரமானது. - ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுர செம்மணியைப் பார்வையிட வேண்டும்

செம்மணி மனிதப் புதைகுழியில் எடுக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் எங்கள் மண்ணில் நடந்த பேரவலத்தின் சாட்சியமாகும்.

ஆம், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் ஈனச் செயலின் அடையாளமாக செம்மணி மனிதப் புதைகுழி உள்ளது.

ஆக, 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த யாழ்ப்பாணத்தில் குடியிருக்க வந்த தமிழ் மக்களுக்கு நடந்தது என்ன என்பது இப்போது உறுதியாகிறது.

என்ன செய்வது, இந்த உலகில் எமக்காகக் குரல் கொடுப்பதற்கு எவரும் இல்லை என்ற கந்தறு நிலையில் இருக்கக்கூடிய ஈழத் தமிழ் மக்கள், தமக்கு சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட அநீதிக்கு - கொடுமைக்கு சர்வதேச சமூகம் நீதியைப் பெற்றுத் தரும் என நம்பினர்.

எனினும் அந்த நம்பிக்கையும் காலக் கடப்பில் இழந்து போகிறது.

இதுதான் என்றால் இல்லை. எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குச் செய்த ஈனத்தை எப்படிச் சொல்வது.

ஆக, ஒட்டுமொத்தத்தில் இந்த உலகில் வஞ்சிக்கப்பட்ட ஓர் இனமாக ஈழத் தமிழ் மக்கள் உள்ளனர்.

அவர்களுக்காக யாரும் குரல் கொடுக்கப் போவதில்லை. அவ்வாறு யாரேனும் குரல் கொடுக்க முற்பட்டாலும் அதனை ஏதோவொரு வகையில் தடுத்துநிறுத்துவதை நம்மவர்கள் மிகச் சிறப்பாகச் செய்து முடிப்பர்.

இப்போது செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகளை எண்ணிக் கணக்கெடுக்கின்ற உரிமை மட்டுமே நமக்குத் தரப்பட்டுள்ளது என்பதை பெருமூச்சோடு நினைந்து கொள்கிறோம்.

நிலைமை இதுவாக இருக்கையில், இன்று செப்ரெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்ற ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமிழ் மக்கள் மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தால், மனிதப் புதைகுழி உள்ள செம்மணிக்கு ஒரு கணம் சென்று அங்குள்ள நிலைவரத்தை - தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவலத்தை நேரில் பார்வையிட வேண்டும்.

ஆம், தற்போது பட்டலந்த வதைமுகாம் எங்ஙனம் பேசுபடுபொருளாகியுள்ளதோ - பட்டலந்தை வதைமுகாமில் நடந்த சித்திரவதைகளுக்கும் கொலைகளுக்குமான நீதி விசாரணைகள் மீள் எழுச்சி பெற்றுள்ளனவோ அதுபோல, தமிழ் மக்களைக் கடத்திக் கொலை செய்து செம்மணியில் புதைத்த அந்தப் பேரவலத்துக்கும் பெரும் கொடுமைக்கும் நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதன்மூலம் சம்பந்தப்பட்ட பிணந்தின்னிகளை அம்பலப்படுத்த வேண்டும்.

இதை இந்த நாட்டின் ஆட்சித் தலைவராக இருக்கக்கூடிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செய்ய வேண்டும்.

அதைச் செய்வேன். தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவேன் என்பதை உறுதி செய்யும் வகையில் ஜனாதிபதி அநுர; செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

# ஐ.நா கூட்டத்தொடருக்கு முன் தூதுவர்களைச் சந்திக்கிறார் விஜித ஹேரத்

### மனித உரிமைகள் பிரச்சினை குறித்து விளக்கமளிப்பார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்னதாக, நாட்டில் உள்ள தூதுவர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கலந்துரையாடவுள்ளார்.

இந்த விடயத்தில் ஆர்வமுள்ள நிபுணர்கள் மற்றும் சட்டத்தரணிகளையும் அமைச்சர் சந்திக்கவுள்ளார்.

அடுத்த வாரம் இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெறும் என்று வெளிவிவகார அமைச்சின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதன்படி, புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்திற்குள் மனித உரிமைகள் பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து வெளிவிவகார அமைச்சர் இராஜதந்திர அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

எவ்வாறாயினும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், இலங்கை மற்ற நாடுகளின் ஆதரவைப் பெற வேண்டியிருக்கும்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்த தமது அறிக்கையை அந்த அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விவசாயிகளின் வாழும் உரிமை அநுர அரசாங்கத்தால் பறிப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

விவசாயிகளின் வாழும் உரிமை அநுர அரசாங்கத்தால் பறிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

மொனராகலை மாவட்டதிலுள்ள கொட்டியாகல 99 சந்திப் பகுதியில் நேற்று (31) நடைபெற்ற கொட்டியாகல விவசாயிகளின் காணிப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்.

விவசாயிகள் தங்களது மானியங்களையோ அல்லது நிதி உதவியையோ கேட்கவில்லை. மாறாக பல தசாப்தங்களாக தாம் பயிரிட்டு வரும் நிலத்தின் மீதான உரிமையைத்தான் கேட்கின்றனர்.

சோளம், தர்பூசணி மற்றும் வெண்டிக்காய் ஆகியவற்றைப் பயிரிடுகின்ற 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் குடும்பங்கள், 25 ஆயிரம் ஏக்கரில் பல தசாப்தங்களாகப் பாரம்பரியமாகப் பயிரிட்டு வருகின்றனர். அவர்கள் தமது சேனைப் பயிர்ச் செய்கையின் நிலத்துக்கான உரிமையைக் கோரி நிற்கின்றனர்.

இந்த விவசாயிகள் வாழும் உரிமை, வாழ்வாதாரம் மற்றும் விவசாயம் செய்யும் உரிமையைக் கோரி நின்ற போதிலும் இன்று அது பறிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் இந்தப் பிரச்சினைகளை ஆளும் தரப்பு அமைச்சர்களிடம் கொண்டு வரப்படும் போது, அவர்கள் அபத்தமான பதில்களை வழங்குகின்றனர்.

இந்தப் பிரச்சினைகளை மாவட்ட அபிவிருத்திக் குழு மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு அமைச்சரவை அமைச்சர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்த உரிமையைப் பெறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும்.

ஜனநாயக முறையில் இதற்காக முடிந்தவரை உரத்த குரலை எழுப்பும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து அரசாங்கத்திற்கு சுமை கொடுக்காது சுதந்திரமான வாழ்க்கையை இம்மக்கள் முன்னெடுத்து வாழ்ந்தாலும் இன்று தீர்வுகளை வழங்காமையால் அவர்களை ஏழ்மை நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளி வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சுமத்தியுள்ளார். (ம-7)

# ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் குற்றச்சாட்டு

### சட்டமா அதிபர் அதிருப்தி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பாக வெளியிட்டிருந்த குறிப்புகள் குறித்து இலங்கையின் சட்டமா அதிபர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே ஃபிராஞ்சை சந்தித்த போதே சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் ஆணையாளரது அறிக்கையின் உள்ளடக்கங்களை மறுத்த ரணசிங்க அடுத்த வாரம் ஜெனீவாவில் நடைபெறும் 60ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படும் குறிப்புக்களில், இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடத்தை குறித்து தெளிவூட்டப்படும் என்றும் இந்த குறிப்புக்கள் தற்போது இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டேர்க்கின் அறிக்கையில் உள்ள அவதானிப்புகளுக்கு ஒட்டுமொத்த அரசாங்கத்தின் பதிலின் ஒரு பகுதியாக இது இருக்கும் என்றும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். (ம-7)

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

புத்தளம் வென்னப்புவப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களை இலக்கு வைத்து காரில் பிரவேசித்த இனந்தெரியாத நபர்களால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரில் பிரவேசித்தவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களைக் காரில் மோதி விபத்துக்குள்ளாக்கி அதன் பின்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அத்துடன் உயிரிழந்தவருடன் இருந்த மற்றைய நபர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 49

## சொக்கன்

சில நாட்கள் கழித்து அவருக்கு மேலிடத்திலிருந்து அழைப்பு வந்தது மிஸ்டர் மொர்டெசாய் வனுனு இனிமே உங்களுக்கு இங்கே வேலை இல்லை. நீங்க வீட்டுக்குப் போகலாம்!

சந்தோஷம் புன்னகையோடு வெளியே வந்தார் மொர்டெசாய்.

டிமோனோ அதிகாரிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த ஆளுக்கு என்னாச்சு? டிஸ்மிஸ் செஞ்சா இப்படிச் சிரிக்கிறானே? பாவம் முப்பது வயசிலயே டைத்தியம் முத்திடுச்சோ?

அப்போது அவர்களுக்குத் தெரியாத விடயம் மொர்டெசாய் தன்னுடைய ஆடைகளுக்குள் இரண்டு ஃபிலிம் ரோல்களை மறைத்து வைத்திருந்தார். அதில் கிட்டத்தட்ட 60 புகைப்படங்களை எடுத்துத் தள்ளியிருந்தார்.


அதற்குள் டிமோனோ அணு ஆயுத ஆராய்ச்சி உற்பத்தித் தொழிற்சாலையின் ஒட்டுமொத்த ஜாதகமும் தெளிவாகப் பதிவாகியிருந்தது.

அதுமட்டுமில்லை. டிமோனோவில் கிட்டத்தட்ட பத்து வருடங்கள் பணியாற்றிய மொர்டெசாய் அங்கே என்ன நடக்கிறது என்பதைப்பற்றி எல்லா விவரங்களையும் நன்றாகப் புரிந்துவைத்திருந்தார். அவர்மட்டும் வெளியே போய் இந்த விடயங்களை யெல்லாம் பகிரங்கமாகப் பேச ஆரம்பித்தால் கதை கந்தல்தான்.

ஆனாலும் ஏனோ இஸ்ரேல் மொர்டெசாயைத் தடுத்து நிறுத்தவில்லை. ஜஸ்ட்லைக் அவரைத் தப்பிக்க அனுமதித்துவிட்டார்கள்.

மொர்டெசாய் வனுனு இஸ்ரேலில் இருந்து வெளியேறி நேபாளம் வந்தார். அங்கிருந்து பர்மா, தாய்லாந்து, கடைசியாக அவுஸ்திரேலியாவில் ஏதோ ஒரு வேலை பார்த்துக்கொண்டு செட்டிலாகிவிட்டார்.

அப்போதும் அவருடைய பைக்குள் அந்த



இரண்டு ஃபிலிம் ரோல்கள் பத்திரமாக இருந்தன. அந்தச் சுருள்களுக்குள் ஒளிந்திருக்கிற புகைப்பட ரகசியங்கள் வெளியானால் இஸ்ரேலின் குட்டு உடைந்துவிடும் அதன்பிறகு உலக நாடுகள் மத்தியில் அவர்களுக்கு ஆப்பு நிச்சயம்.

மிக எதேச்சையாக இந்த விடயம் மொசாட்டுக்குத் தெரியவந்து. அவர்கள் அலறியடித்துக் கொண்டு மொர்டெசாயைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

### ஸ்கூப்

ஆஹா இது சூப்பரான மேட்டராச்சே ஆஸ்கர் குர்ரெரோ உற்சாகத்தில் துள்ளினார். இந்த ஃபோட்டோக்களை வெச்சு நீயும் நானும் மில்லியன் கணக்கில சம்பாதிக்கலாம் வாழ்நாள்முழுக்க டொலரிலேயே மிதக்கலாம் தெரியுமா?

மொர்டெசாய் வனுனு லேசாக முகம் சுளித்தார். இந்த விடயத்தில் பணத்தைப்பத்திப் பேசறீங்களே உங்களுக்கே அருவருப்பா இல்லையா? என்றார் எரிச்சலுடன் இந்த நியூஸ் ஃபோட்டோஸ் வெளிவந்தா இஸ்ரேலுடைய அணு ஆயுத ஆராய்ச்சிக்கு நெருக்கடி வரும் மற்ற நாடுகளுடைய ப்ரஷர் தாங்காமல் அவர்கள் அணு குண்டு தயாரிக்கிறதை நிறுத்துவாங்க. அதன் மூலம் ஆயிரக்கணக்கான அப்பாவி ஜனங்க உயிர் பிழைப்பாங்க அது தானே முக்கியம்?

பிரதர் எப்பவும் பொது நலனையே நினைச்சு கொண்டிருக்கக்கூடாது. அப்பப்போ கொஞ்சம் சுயநலமாகவும் யோசிக்கலாம் தப்பில்லை ஆஸ்கர் குறும்பாகக் கண்ணடித்தார். இனிமே நீங்க இதைப்பற்றிக் கவலைப் படாதீர்கள் இந்த ஒரு நியூஸை வெச்சே உங்களை மில்லியனர் ஆக்க வேண்டியது என்னுடைய பொறுப்பு.

ஆஸ்கர் மொர்டெசாய் வனுனு அஸ்திரேலியாவில் டாக்ஸி டிரைவராக இருந்தார். அங்கே அவருக்குப் பழக்கமானவர்தான் ஆஸ்கர் குர்ரெரோ என்கிற பத்திரிகையாளர்.

ஆஸ்கருக்குப் பணத்தாசை அதிகம் அதைவிட அதிகமாக பந்தா பண்ணுகிற ஆசை.

மொர்டெசாயிடம் இருக்கிற டிமோனா புகைப்படங்களைப்பற்றிக் கேள்விப்பட்டதும் ஆஸ்கர் உற்சாகமாகிவிட்டார். எப்படியாவது இந்த ஸ்கூப் செய்தியை ஒரு பெரிய பத்திரிகைக்கு விற்றுக் காசு சேர்த்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்.

அவருடைய கெட்ட நேரம் மொர்டெசாய் எடுத்த புகைப்படங்களெல்லாம் ரொம்பத் தெளிவாக இருந்தன. அதைப் பார்த்த ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் யாரோ டுபாக்கூர் ஃபோட்டோ தயார் பண்ணி ஏமாத்துறாங்க என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டார்கள். யாராச்சும் டாப் சீக் ரெட் டுமோனோவுக் குள்ள இப்படிச் சுலப மாப் போய் ஃபோட்டோ எடுக்கமுடியுமா? சான்ஸே இல்லை!

ஆஸ்கர் நொந்து போனார். அவர் என்னதான் கரடியாகக் கத்தினாலும் உள்ளூர்ச் செய்தித்தாள்கள் பத்திரிகைகள் அவரை நம்பவில்லை. இந்தச் செய்தி புகைப்படங்களை வெளியிட மறுத்துவிட்டார்கள்.

இப்போது என்ன செய்வது? ஆஸ்திரே லியப் பத்திரிகைகளுக்கு ஆர்வம் இல்லை என்றால் வெளிநாட்டில் முயற்சி செய்யலாமா? ஆஸ்கர் குர்ரெரோ எல்லாத் திசைகளிலும் வலை வீச ஆரம்பித்தார்.

அதுதான் அவர் செய்த முதல் தவறு என்னிடம் இஸ்ரேல் அணு ஆயுதங்களின் ஃபோட்டோ இருக்கிறது என்று அவர் ஊர் முழுக்க தண்டோரா போட்டதால் விடயம் சீக்கிரத்தில் மொசாட் காதுகளை எட்டிவிட்டது.

ஆரம்பத்தில் மொசாட்டும் இதை நம்பவில்லை. ஆனால் மொர்டெசாய் எடுத்த புகைப்படங்களைப் பார்த்ததும் அப்படியே அதிர்ந்து போய் விட்டார்கள். நிஜமாகவே ஒருத்தன் டிமோனோவை விதவிதமாக ஃபோட்டோ எடுத்துத் தள்ளியிருக்கிறார் எப்படி? எங்கே தப்பு நடந்தது? என்று தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார்கள்.

போகட்டும் இனிமேல் அதைப்பற்றி யோசித்துப் பிரயோஜனம் இல்லை இப்போது இந்தச் செய்தி புகைப்படங்கள் வெளியாகிவிடாதபடி தடுக்கவேண்டும் அதுவும் உடனே.

என்ன செய்யலாம்? அந்த மொர்டெசாய் படுபாவிய முடித்து விடலாமா?

ம்ஹூம் இப்போது ஆஸ்கரிடம் சொன்னது போல் அவர் இன்னும் யாரிடமெல்லாம் விடயத்தைக் கக்கியிருக்கிறாரோ கடவுளுக்குதான் வெளிச்சம். அத்தனை பேரையும் கண்டு பிடித்துக் கொலை செய்வதற்கு நேரம் இல்லை.

அதற்குப் பதிலாக மொர்டெசாயை இஸ்ரேலுக்குக் கடத்திக் கொண்டுவரத் தீர்மானித்து மொசாட் அப்போதுதான் அவரை விசாரணை செய்து எங்கே தப்பு நடந்தது என்று கண்டுபிடிக்கலாம் இதில் யார் யார் மொர்டெசாய்க்கு உடந்தை அவர்மூலமாக விடயம் இன்னும் எங்கெல்லாம் கசிந்திருக்கிறது என்று கண்டு பிடித்துச் சரி செய்யலாம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருட காலம் பூர்த்தியாவதை முன்னிட்டு முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி யாழ்.விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி காலை 08.30 மணியளவில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் யாழ். பிரதேச அலுவலகத்தினை காலை 09.30 மணியளவில் திறந்து வைக்கவுள்ளார்.

அதன் பின்னர் மதியம் 1.30 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். தொடர்ந்து யாழ். பொது நூலகத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை (02) முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன் தென்னை முக்கோண வலயப் பணிகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ம-7)

## யாழ்.வரும்...

ஜனாதிபதி அநுர செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது எனக் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாண விஜயத்தின்போது அவர் செம்மணிக்கு வருகை தருவாரா? என்பது குறித்து நீதிமன்றுக்கு இதுவரையில் அறியப்படுத்தப்படவில்லை என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 12 எலும்புக்கூடு...

கூடுகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் 39ஆவது நாள் அகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 12 எலும்புக்கூட்டுத் தொகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு 10 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்ட 10 எலும்புக்கூட்டுத் தொகுதியுடன் இதுவரையில் 191 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இதுவரையில் 209 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியத்துடன் அகழ்வுப்பணிகள் நிறைவடைந்த நிலையில் இன்று திங்கட்கிழமை காலை மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. (ம-7,33)

## யாழில்...

ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த யுவதி உள்ளிட்ட மூவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, அவர்களின் உடைமையில் இருந்து 09 கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதோடு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## மின்சாரம்...

தும்பளைப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் சிவகுமார் (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் ஊரெழு கிளானைப் பகுதியில் தனது சகோதரியின் வீட்டில் இருந்து தோட்ட வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

பன்றியிடம் இருந்து தனது மரவள்ளித் தோட்டத்தை பாதுகாப்பதற்காக மின்சார வேலி அமைத்துள்ளார். இரவில் மாத்திரம் மின்சாரம் பாய்ச்சப்பட்டு காலையில் மின்சாரத்தை நிறுத்துவது வழமை.

குறித்த நபருக்கு இரண்டு தோட்டங்கள் உள்ள நிலையில் மற்றைய தோட்டத்துக்கு சென்றுவிட்டு பின்னர் குறித்த தோட்டத்திற்கு வந்துள்ளார்.

மின்சார இணைப்பு நிறுத்தப்பட்டதாக நினைத்து வேலியில் கைவைத்த வேளை அவரை மின்சாரம் தாக்கியுள்ளது. இதன்போது சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,60,104)

## 16...

களுக்குள்ளான மாணவி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் அச்சுவேலி இடைக்காடு பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் சுபானு (வயது-16) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

குறித்த மாணவியின் தந்தை நீண்டகாலமாக மனைவியைப் பிரிந்திருந்த நிலையில் மாணவி தாயாருடனே வசித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 25ஆம் திகதி விபரீத முடிவெடுத்து தனக்குத் தானே மண்ணெண்ணெயை ஊற்றி தீமூட்டியுள்ளார்.

இதில் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,60,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 5938
B 2 6 0 6 3 2
அத சம்பத
B 0 6 3 2
சீட்டிழுப்பு இலக்கம் 0513
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 0654
மேடம் 23 32 35 49

தன நிதானய
திகதி - 2025.08.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1968
N 01 17 51 76 N
Double Chance 14553

மெகா பவர்
திகதி 31/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2286
H 04 43 66 69 77

ஜய
திகதி 2025.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 0206
P 0 9 7 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4180
சீட்டிழுப்பு திகதி 31.08.2025
C 15 32 50 78
C
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.31
சீட்டிழுப்பு இலக்கம் 1247
மீனம் 04 32 45 47 மீனம்
26551

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
31.08.2025 வெற்றி வாரம் 0646
A 8 9 7 9 6 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,213,404.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2912
சீட்டிழுப்பு திகதி 2025.08.31 தினம் ஞாயிற்றுக்கிழமை
23 54 68 75 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,151,843.20
DLB

சனிதா
திகதி 31.08.2025 வெற்றி வாரம் 5073
45 58 73 77 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,689,005.20
DLB

சசிரி
வெற்றி வாரம் 0760
சீட்டிழுப்பு திகதி 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை
26 37 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,941,600.00
DLB


ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4624
சீட்டிழுப்பு திகதி 31.08.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
04 08 27 54 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,545,427.60
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 20 06 46 66 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.591,153,603.80
2088
31.08.2025 ஞாயிற்றுக்கிழமை
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2738
சீட்டிழுப்பு திகதி: 2025.08.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,781,038.40
16 39 59 73 P
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலைக்கு நீதி கோரி யாழில் கையெழுத்து வேட்டை



வடக்கு - கிழக்கு மனிதப் புதைகுழிகள் மற்றும் இனப் படுகொலைக்கு நீதி கோரி கையெழுத்துப் பெறும் நடவடிக்கை யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு சந்தை முன்பாக நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையில் இக் கையெழுத்து பெறும் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலைகளுக்கும் நீதியைக் கோருவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிக்கும் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சுயாதீன விசாரணை அவசியம்

### இலங்கைக்கான ஐ.நா ஒருங்கிணைப்பாளர்



(கொழும்பு)

மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சுயாதீன விசாரணை அவசியம் என இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல்போனோர் தினமான நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டு அதில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச காணாமல்போனோர் தினம், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நினைவை மதிக்கும் ஒரு நாள் என்றும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இந்த மீறலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறக்கவோ கூடாது என்பதை நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நீதி, உண்மை மற்றும் இழப்பீடுகள் ஆகியவை நல்லிணக்கம், நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் இலங்கையர்கள் நீண்டகாலமாகத் தேடிக் கொண்டிருக்கும் நிலையான அமைதியின் பிரிக்க முடியாத அடித்தளங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை கவலை கொண்டுள்ள நிலையில் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் தண்டிக்கப் படக்கூடாது எனவும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒவ்வொரு நாளும் தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் ஒவ்வொரு குடும்பத்துடனும் ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கின்றது எனவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மை, நீதி, இழப்பீடுகள் என்பன மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்களுக்கான உரிமைகளை உணர முடியும் என்பதை உறுதி செய்வதற்காக வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த நம்பகமான, சுயாதீனமான விசாரணைகளை ஆதரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து உறுதியாக இருக்கின்றது எனவும் மார்க் ஆண்ட்ரே ஃபிராஞ்ச் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## மாப்பிள்ளை தேவை

01. வசாவிளான் - கொல்லன்கலட்டி, இந்து, 1993, ஆயிலியம், MSc, Dubaiயில் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53919)
02. சாவகச்சேரி - கரவெட்டி, இந்து, 1991, கேட்டை, BSc, Research Assistant சிங்கப்பூர் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (23499)
03. புலோலி, இந்து, 1990, விசாகம், Accounting Degeree, Accountant, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (21584)
04. வேலணை - சுருவில், இந்து, 1994, விசாகம், Degeree in medical IT, Germany Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (28376)
05. இளவாலை - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, கார்த்திகை, MBBS Doctor, NewZealand Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (28160)
06. காரைநகர் - கொக்குவில், இந்து, 1993, அஸ்வினி, B.Com (Australia macquaric University), Accountant, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30978)
07. வட்டுக்கோட்டை - சாவகச்சேரி, இந்து, 1994, அத்தம், Masters Completed, Accountant, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30839)
08. மானிப்பாய் - அளவெட்டி, இந்து, 1992, மகம், MSc in civil Engineering, Transportation Engineer, USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30167)
09. காரைநகர் - வடலி அடைப்பு, இந்து, 1995, மூலம், BSc (hons), Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (28477)
10. காரைநகர் - பருத்தித்துறை, இந்து, 1995, பூரம், BSc Accountanting & Finance, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33254)

நீங்களாகவே எமது website www.thaalee.comஇல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P www.thaalee.com 077 539 3728 (5200)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3779) 076 825 7716 (ஆகாஸ்)

## வருடாந்த பொதுக்கூட்டம்

வயாவிளான் தெற்கு ஞான வைரவர் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 14.09.2025 அன்று காலை 10.00 மணிக்கு ஆலயத்துக்கு அருகிலுள்ள கலா மண்டபத்தில் நடைபெறும்.

ஆலய பரிபாலன சபை (5195)

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு | குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சுவி | இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் வயிற்றுப்புண் | Gastritis அல்சர் | மிகச்சிறந்த மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (1505)

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
கிளைகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கொழும்பு (5199)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுகள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com (C-3780)

## பணிப் பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு பணிப் பெண் தேவை.

தொடர்பு 077 2626 944 (5198)

## 22 காணி விற்பனைக்கு 22

01. யாழ்., K.K.S வீதியில் சிவன்கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 150 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட ஆறுபரப்புக் காணியும்
02. யாழ்., பிறவுண் வீதிச் சந்தியில் இரண்டு பரப்பில் அமைந்த 6 கடைத் தொகுதியும்
03. யாழ்., பிறவுண் வீதியில் 30 அடி அகலமும் 130 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 723 2535 (C-3781)

## மணமகன், மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த 7 இல் சூரியன் செவ்வாய் உள்ள அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கும் 1989 இல் பிறந்த மணமகளுக்கும் வரம் தேடுகின்றோம்.

தொடர்பு 071 446 4722, 077 361 2670 (5194)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... இல் 01.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.